**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.35/2014**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 3ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 11 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெயராமன் | மதம் | : இந்து |
| த/பெ | : சுப்பிரமணி | ஜாதி | : -- |
| வயது | : 50 | கிராமம் | : மாமண்டுர் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**11.02.2026**
**வா.சா. 3 திரும்ப அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு தாக்கல் செய்த மன்னேசம்மாலை எனக்கு தெரியும் என்றால் சரிதான். மன்னேசம்மாவின் மகன் பெயர் ராதாகிருஷ்ணன் என்றால் சரிதான். ராதாகிருஷ்ணன் மனைவி பெயர் நாகம்மாள் என்றால் சரிதான். ராதாகிருஷ்ணன், நாகம்மாவின் ஒரே மகன் கஜேந்திரன் என்றால் சரிதான். மேற்படி நபர்களை எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி நபர்களை எத்தனை வருடங்களாக எனக்கு தெரியும் என்றால் நான் பிறந்தது முதல் எனக்கு தெரியும். சுமார் 50 வருடங்களாக எனக்கு அவர்களை தெரியும் என்றால் சரிதான். மன்னேசம்மாள் அவரது மகன் ராதாகிருஷ்ணன் உடன்தான் இருந்தார் என்றால் ஆமாம். மன்னேசம்மாளுக்கு முன்பே ராதாகிருஷ்ணன் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். ராதாகிருஷ்ணன் இறந்த பின்பு நாகம்மாள், கஜேந்திரன் உடன்தான் மன்னேசம்மாள் இருந்தார் என்றால் ஆமாம்.

2. கஜேந்திரன் மனைவி பெயர் ராஜேஷ்வரி என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 12 உயிலில் என்னுடைய பேத்தி ராஜேஷ்வரிக்கு என சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். ராஜேஷ்வரி மன்னேசம்மாளின் பேத்தி இல்லை என்றாலும் பேரனின் மனைவி என்றாலும் சரிதான். வா.சா.ஆ 12 உயிலில் மன்னேசம்மாவின் பேத்தி என தவறாக

சொல்லப்பட்டுள்ளது என்றால் பேரனின் மனைவி பேத்திதான். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் கஜேந்திரன் மட்டும்தான் மன்னேசம்மாவின் பேரன் என்றாலும் ராஜேஷ்வரியை பேத்தி என தவறாக சொல்லப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ 12 உயிலின் 2ம் பக்கத்தில் நான் கிருஷ்ணம்ம நாயுடுவிடமிருந்து ரூ.2500/–க்காக கிரையம் பெற்றதென சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மன்னேசம்மாள் இந்த வழக்கு தாக்கல் செய்த போது ரூ.4000/க்கு கிரையம் பெற்றதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது.

3. மன்னேசம்மாள் இந்த வழக்கு தாக்கல் செய்த போது ரூ.4000/க்கு கிரையம் பெற்றதாக குறிப்பிட்டுள்ளார் என்றாலும் உண்மையாகவே மன்னேசம்மாள் உயில் எழுதியிருந்தால் கிரைய தொகையை சரியாக குறிப்பிட்டிருப்பார் என்றாலும் வா.சா.ஆ 12 உயில் பொய்யான ஆவணம் என்றாலும் சரியல்ல. இந்த உயில் எங்கு தட்டச்சு செய்யப்பட்டது என்றால் நாபலூரில் சரவணன் என்பவர் தட்டச்சு செய்தார். நாபலூருக்கும் எங்கள் ஊருக்கும் எவ்வளவு தூரம் என்றால் ஒன்றரை கி.மீ. இருக்கும். 2ம் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன் என்றால் ஆமாம். எங்கு வைத்து சாட்சி கையெழுத்து செய்தேன் என்றால் நாபலூரில் வைத்து கையெழுத்து செய்தேன். நான் கையெழுத்து செய்யும்போது 1ம் சாட்சி இருந்தாரா என்றால் இருந்தார். நான் கையெழுத்து செய்யும்போது மன்னேசம்மாள் இருந்தாரா என்றால் இருந்தார். அப்போது மன்னேசம்மாள் நடக்கும் நிலையில் இருந்தாரா உடல்நிலை முடியாமல் இருந்தரா என்றால் நடக்கும் நிலையில்தான் இருந்தார்.

4. நாகம்மாள், கஜேந்திரன், ராஜேஷ்வரி ஆகியோர் மன்னேசம்மாளை அழைத்து வந்தார்கள் என்றால் சரிதான். மன்னேசம்மாள் வா.சா.ஆ 12 உயிலில் கையெழுத்து செய்யும்போது மேற்படி நபர்கள் உடன் இருந்தனர் என்றால் ஆமாம். 2006ல் நாகம்மாளும் கஜேந்திரனும் சொத்தை சுப்பிரமணிக்கு விற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2006 முதல் சுப்பிரமணிதான் வழக்கு சொத்தில் பயிர் செய்யும் விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது.

நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நானும் அதே ஊரில்தான் உள்ளதால் 2006 முதல் சுப்பிரமணி வழக்கு சொத்தில் பயிர் செய்யும் விவரம் எனக்கு தெரியும் என்றாலும் இல்லை. 2006லேயே நாகம்மாளும், கஜேந்திரனும் சொத்தை விற்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் இல்லை. எனக்கு தெரியாது. சுப்பிரமணிக்கு சொந்தமான வழக்கு சொத்தை அபகரிக்க வேண்டி ஏற்படுத்தப்பட்டதுதான் வா.சா.ஆ 12 உயில் என்றாலும் அது போலியானது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ 12 உயில் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. உயிலின் முத்திரைத்தாளை ராஜேஷ்வரி அருங்குளம் என்பவர் வாங்கியுள்ளார் என்றால் ஆமாம். உண்மையிலேயே மன்னேசம்மாள் உயிலை எழுதி இருந்தால் அவர் பெயரில்தான் முத்திரைத்தாள் வாங்கியிருப்பார் என்றாலும் இது பொய்யான உயில் என்றாலும் சரியல்ல. ராஜேஷ்வரி பெயரில் உயில் எழுதப்பட்டதால்தான் அவர் பெயரில் முத்திரைத்தாள் வாங்கப்பட்டது. நான் வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றாலும் நான் வாதிகளிடம் ஆதாயம் பெற்றுக்கொண்டு பொய் சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)